செ.வெ.எண்:29 நாள்:22.01.2020

கரூர் மாவட்டம்

**விபத்தில்லா தமிழகத்தை உருவாக்குவதே தமிழக அரசின் நோக்கம் - சாலை பாதுகாப்பு வாரவிழாவை முன்னிட்டு ஓட்டுநர்களுக்கான மருத்துவமுகாமினை துவக்கி வைத்து மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

தமிழக போக்குவரத்துத்துறையின் சார்பில், கரூர் மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலத்தின் மூலம் 31 வது சாலை பாதுகாப்பு வாரவிழாவினை முன்னிட்டு அட்லஸ் கலையரங்கத்தில் நடைபெற்ற தமிழக அரசு போக்குவரத்துத்துறை மற்றும் பள்ளி கல்லூரி ஓட்டுநர்களுக்கான மருத்துவமுகாமினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று(22.01.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்கள்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

சாலை பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கடைபிடிக்கப்படுகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டு 20.01.2020 முதல் 27.01.2020 வரை சாலை பாதுகாப்பு வாரமாக கடைபிடிக்கப்படுகின்றது. சாலை விபத்துக்களை குறைத்ததில் தேசிய அளவில் முதல் பரிசிற்கான மத்திய அரசின் விருதினை தமிழக போக்குவரத்துத்துறை பெற்றிருக்கின்றது. மத்திய அரசின் சார்பில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களும், மத்திய தரைவழிபோக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களும் வழங்கினார்கள். தமிழக அரசின் சார்பில் அந்த விருதை பெற்றுக்கொண்டதில் பெருமைப்படுகின்றேன் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

2000ஆம் ஆண்டு 10,000 வாகனங்களுக்கு 19 பேர் உயிரழந்தார்கள் என்ற நிலை இருந்தது. தற்போது 10,000 வாகனங்களுக்கு உயிரிழப்பு 3 ஆக குறைக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 53 சதவீதம் அளவிற்கு விபத்துக்களையும், உயிரிழப்புக்களையும் தமிழக அரசு குறைத்திருக்கின்றது.

2016 ஆம் ஆண்டு கணக்கெடுக்கப்பட்டதில் இருந்து 2020க்குள் இந்தியாவில் விபத்துக்களையும், உயிரிழப்புகளையும் 50 சதவீதமாக குறைக்கின்ற அடிப்படையில், சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடம் எற்படுத்த வேண்டும் என்ற உச்சநீதிமன்ற நீதியரசர்களின் உத்தரவிட்டிருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களாலும், சாலைபாதுகாப்பு நிதியை ரூ.20 கோடியிலிருந்து ரூ.65 கோடியாக உயர்த்தியதன் காரணமாகவும், அதனை தொர்ந்து தமிழக அரசு எடுத்த சாலைபாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளின் காரணமாகவும் உச்சநீதிமன்றம் கூறிய 50 சதவீதத்தையும் தாண்டி 53 சதவீத உயிரிழப்புகளை தடுத்துள்ளோம்.

நெடுச்சாலைகளில் விபத்து ஏற்படும் இடங்கள் கண்டறியப்பட்டு அந்த சாலை பாதுகாப்பு நிதியில் மூலம் உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இரவு நேரங்களில் தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வாகனகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது நகர்புறத்தில் 90 சதவீதம் பேர் தலைகவசம் அணிகின்றனர் ஆனால் கிராமபுப்பகுதில் உள்ளவர்களும் சாலை விதிகளை பின்பற்றி தலைக்கவசம் அணிய வேண்டும். எந்த மாவட்டத்திற்கும் இல்லாத வகையில் கரூர் மாவட்டத்திற்கு ரூ.15 கோடி திட்டங்களுக்கான சாலை பாதுகாப்பு நிதி பெறப்பட்டு உயர்மின்கோபுரங்கள் அமைத்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு விபத்துகள் குறைக்கப்பட்டுள்ளது.

சாலை விதிகள் தொடர்பாக குறியீடுகள் குறித்து யாரும் முழுமையாக தெரிந்து கொள்வதில்லை வாகனங்களின் எண்ணிக்கையும் வாகனத்தின் வேகமும் அதிகமாக உள்ளது. அதனால் வருங்காலத்தில் வாகன உரிமம் பெறுவதற்கு தேர்வு முறைகள் கடுமையாக கொண்டுவரப்பட உள்ளது. இதுதொடர்பாக பல வெளிநாடுகளின் சாலை விதிகள் சேகரிக்கப்பட்டு

2000 கேள்விகள் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவை விரைவில் இணையதளக்கில் வெளியிடப்பட உள்ளது. பள்ளி பாடத்திட்டத்தில் சாலை விதிகள் மற்றும் சாலை பாதுகாப்பு தொடர்பாக பாடங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் அதை அதிகப்படுத்த பள்ளிகளில் உள்ள பிற அமைப்புகளை போல் முதல் முதலாக சாலைபாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட உள்ளது. இதன் காரணமாக பள்ளி பருவம் முதல் சாலை பாதுகாப்பு தொடர்பாக தெரிந்து கொள்ள முடியும்.

சாலை விபத்தில் இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சம் நிதியும் ஊனமுற்ற நபர்களுக்கு ரூ.50 ஆயிரம் முதல் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த 2018-2019 ஆண்டில் ரூ 100 கோடியும், 2019-2020 ஆண்டில் ரூ.80 கோடியும் முதலமைச்சர் விபத்து நிவரணநிதி வழங்கப்பட்டுள்ளது. விபத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்பட்டாலும், ஒரு குடும்பத்தில் ஏற்படும் உயிர் இழப்பை எவாராலும் ஈடுகட்ட முடியாது. எனவே, நிதியுதவி என்பதை தாண்டி, விபத்தில்லா தமிழகத்தை உருவாக்குவதே தமிழக அரசின் தலையாய கடமையாக உள்ளது.

இன்று நடைபெறும் மருத்துவ முகாமில் அரசு பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் பள்ளி-கல்லூரி பேருந்து ஓட்டுகள் என மொத்தம் 500க்கும் மேற்பட்ட நபர்களுக்கு மருத்துவப்பரிசோதனை நடத்தப்படவுள்ளது. பேருந்துகளில் அதிக அளவு பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பயணம் செய்வதால் ஓட்டுநர்கள் கவனமாக வாகனங்களை இயக்க வேண்டும். ஆண்டு தோறும் கண் மற்றும் பொது மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

வெளிநாடுகளில் உள்ளதுபோல தமிழகத்தில் முதல் கட்டமாக ரூ.25 கோடி நிதியில் திருச்சி முதல் செங்கல்பட்டு வரை சாலை விதிகள் மீறுவோர் மீது தானியங்கி அபராதமுறை கொண்டுவரப்பட உள்ளது. அதற்காக 54 கேமராக்கள் பொருத்தப்பட உள்ளது. அபராதம் விதிக்கப்பட்டவர் தொகையை செலுத்தினால் தான் வானத்தை விற்கவோ, வாகன தகுதி சான்றிதழ் பெறவோ முடியும் என்ற வகையில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. பொதுமக்களின் நலகன் கருதி அரசு சட்டம் இயற்றலாம் அதை பொது மக்கள் கடைபிக்க வேண்டும். தனிநபர் ஒழுக்கம் இருந்தால் தான் நாட்டில் எதையும் சாதிக்கலாம். எனவே சாலை பாதுகாப்பு விதிகளை தெரிந்து கொண்டு அதை கடைபித்து விபத்து மற்றும் உயிரிழப்பு இல்லா தமிழகத்தை உருவாக்க அனைவரும் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து 10 வருடங்களுக்கும் மேலாக விபத்தில்லாமல் வாகனங்களை இயக்கிய தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஓட்டுநர்களைப் பாராட்டும் வகையில் நினைவுக்கேடயங்களையும், 50 நபர்களுக்கு விலையில்லா தலைக்கவசங்களையும், மருத்துவ முகாமில் பங்கேற்ற வந்திருந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைப் பாராட்டி நினைவுப்பரிசுகளையும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆர்.பாண்டியராஜன், திருச்சி சரகம் துணைப் போக்குவரத்து ஆணையர் திரு.செ.உதயகுமார், வட்டார போக்குவரத்து அலுவலர்(பொ) திரு.பி.ஆனத், மண்டல போக்குவரத்துக்கழக பொது மேலாளர் திரு.க.குணசேகரன், திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.ஏ.ஆர்.காளியப்பன், மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.கண்ணதாசன், துணைத்தலைவர் திரு.ந.முத்துகுமார், கரூர் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர் திரு.நெடுஞ்செழியன், கரூர் நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.எஸ்.திருவிக, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.காமராஜ், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் திரு.என்.எஸ்.கிருஷ்ணன், திருமதி.மோ.ரேணுகா. திரு.செல்வராஜ், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.